மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திருமதி. எஸ். எழில், எம்.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, சேலம்.

2017 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

அசல் வழக்கு எண். 224 / 2016
~~~~~~~~~~~~~~~~~~~~~~~

| | | |
|---|---|---|
| எஸ். ஏகாம்பரம் | .... | வாதி |
| | / எதிராக / | |
| எம். கந்தசாமி | .... | பிரதிவாதி |

இவ்வழக்கு என் முன்பாக 20-01-2017 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. கே. ராஜா அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ்.மனோகரன் அவர்கள் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்தும், பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகததால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டும், வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், வாதி தரப்பு வாதுரையைக் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

WEB COPY

**தீர்ப்புரை**

தாவா கடனுறுதிச் சீட்டின் பேரில் பிரதிவாதி வாதியிடமிருந்து பெற்ற கடன் தொகை ரூ.13,91,000/-மும், மேற்படி தொகைக்கு ரூ.100/-க்கு ரூ.1.50 வீதம் பின் வட்டியும் கிடைக்க வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்குரையின் சுருக்கம் :

வழக்குரை சொத்து பிரதிவாதிக்கும் மற்றும் இருவருக்கு பாத்தியப்பட்டது. பிரதிவாதி வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வாடகைதாரராக இருந்து வருகிறார், அதன்படி பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தாருக்கு வாதியை நன்கு தெரியும். பிரதிவாதி அடிக்கடி வாதியிடமிருந்து கைமாற்று கடன் வாங்குவதும், அதை சிறிது இடைவெளியில் திருப்பிக் கொடுப்பதும் வழக்கம். இந்நிலையில் பிரதிவாதி வாதியை அணுகி அவரது அவசர தேவைக்கும் மற்றும் அவரது குடும்பத்தார் வசிப்பதற்காக ஒரு வீடு வாங்குவதற்காகவும் ரூ.10,00,000/- கடன் கேட்டதன் பேரில் பிரதிவாதி 11-01-2014 ல் வாதியிடமிருந்து ரூ.10,00,000/-கடன் பெற்றார். மேற்படி கடன் தொகையை வாதி கேட்கும் போது திருப்பிக் கொடுப்பதாகவும், மேற்கடி கடன் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1.50 வட்டி தருவதாகவும் ஒப்புக் கொண்டு அதற்கு ஈடாக ஒரு கடனுறுதிச் சீட்டை அன்றைய தேதியிலேயே எழுதிக் கொடுத்தார். அதன்படி பிரதிவாதி
~~~~~~~~~~~~~~~~~~~~~~~

பிப்ரவரி-2014 முதல் ஜுன் 2014 வரை வட்டி கொடுத்தார். பின்னிட்டு பிரதிவாதி கடன் தொகையை திருப்பிக் கொடுக்கவில்லை. பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் ஒரு வீட்டை விலைக்கு வாங்கி அதை புனரமைப்பு செய்து தற்போது ஒரு மார்டன் வீடாக ஏற்படுத்தி அதை வாடைகக்கு விட்டு அதன்மூலம் பெரிய தொகையை வாடகையாக பெற்று வருகிறார். பிரதிவாதிக்கு வாடகை மூலம் வருமானம் இருந்தும் வாதிக்கு சேர வேண்டிய தொகையை கொடுக்க முன்வரவில்லை. வாதி பலமுறை நேரிலும் தொலைபேசி மூலமும் பிரதிவாதியிடம் கடன் தொகையையும் அதற்குண்டான வட்டி நிலுவையையும் கேட்டும் பிரதிவாதி கடனை திருப்பிக் கொடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார். வாதி, பிரதிவாதி மீது இருந்தத நம்பிக்கையை இழந்துவிட்டார். எனவே பிரதிவாதியிடமிருந்து வரவேண்டிய கடன் தொகையான ரூ.13,91,000/-மும் அதற்கு மாதம் ரூ.100/-க்கு ரூ.1.50 வீதம் பின்வட்டியும் கிடைக்க வேண்டி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

3 பிரதிவாதி வழக்கில் வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்தும், பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவரைப் பொறுத்து தோன்றாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

WEB COPY

4 வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆகவும் மற்றொரு சாட்சி வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிடப்படவில்லை.

5. வழக்குரை சங்கதிகளின் அடிப்படையில் இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய எழுவினா என்னவெனில்,

தாவாவில் வாதி கோரியபடி தீர்ப்பாணை செய்யப்பட வேண்டுமா ?

6. **தீர்வு** :

வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன் சாட்சியத்தில் பிரதிவாதி 11-01-2014 ம் தேதி சொத்தை கிரயம் வாங்கவும், குடும்ப தேவைக்காகவும் ரூ.10,00,000/- கடனாகப் பெற்றுக் கொண்டு வா.சா.ஆ.1 கடனுதிச் சீட்டை எழுதிக் கொடுத்ததாகவும், மேற்படி தொகையைக் கொண்டு பிரதிவாதியும் அவருடைய மனைவியும் வா.சா.அ.2, வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.6-ல் கண்ட சொத்துக்களை கிரயம் பெற்றிருப்பதாகவும், தன்னிடமிருந்து பெற்ற தொகையைத் திரும்ப செலுத்தவில்லை என்பதால் இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

7. வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள முருகானந்தம் கடனுறுதிச் சீட்டில் கையெழுத்திட்டுள்ள சாட்சியாவார். அவர் தன் சாட்சியத்தில் மேற்படி பிரதிவாதி வாதியிடம் ரூ.10,00,000/- கடனாகப் பெற்றுக் கொண்டு தன் முன்னிலையில் கடனுறுதிச் சீட்டில் கையெழுத்து செய்ததாகவும், அதை தானும் கடனுறுதிச் சீட்டை தயாரித்தவரும் பார்த்ததாகவும் கூறியுள்ளார்.

8. மேற்படி வா.சா.ஆ,1 யைக் குறித்த நிறைவேற்றுகை மற்றும் பிரதிபிரயோஜனம் குறித்து வாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக உள்ளார். பிரதிவாதி வாதியிடமிருந்து பெற்ற கடன் தொகையை வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டவர் என்பதால் மேற்படி தாவாத் தொகை வாதிக்கு கிடைக்கக் கூடியது என்று முடிவு செய்து தீர்வு காணப்படுகிறது.

9. இறுதியில், தாவா செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது, வாதிக்கு பிரதிவாதி தாவாத் தொகையான ரூ.13,91,000/-மும், அசல் தொகை ரூ.10,00,000/-க்கு தாவா தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 9% வட்டியும் பின்னிட்டு தீர்ப்பாணை தேதி முதல் தொகை செலுத்தி வைக்கும் தேதி வரை ஆண்டுக்கு 6% வட்டியும் கணக்கிட்டு செலுத்த வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2017 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

WEB COPY

ஒம்/- எஸ். எழில்

மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u> :

| | |
|---|---|
| வா.சா.1 | திரு. ஏகாம்பரம் ( வாதி ) |
| வா.சா.2 | திரு. முருகானந்தம் |

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 11-01-2014 | பிரதிவாதி கந்தசாமி வாதிக்கு எழுதிக் கொடுத்த கடனுறுதிச் சீட்டின் அசல் |
| வா.சா.ஆ.2 | 14-03-2014 | கந்தசாமி மற்றும் குப்பாம்மாள் ஆகியோருக்கு மோகன்ராஜ் மற்றும் ராதா எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 12-09-2011 | கொமாரசாமிபட்டி கிராம சர்வே எண். 225/1, 231/1 சி1 -க்கு உண்டான வில்லங்க சான்றிதழ். |
| வா.சா.ஆ.4 | 29-10-2012 | கந்தசாமி, குப்பம்மாள் மற்றும் ஜோதிலட்சுமி ஆகியோருக்கு எஸ்.ஜெயா என்பவர் எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.5 | 12-09-2011 | சேலம் மாநகரம் வார்டு-கே, பிளாக் 7 சர்வே எண்.149-க்கான வில்லங்க சான்றிதழ். |
| வா.சா.ஆ.6 | 29-10-2012 | கந்தசாமி, குப்பம்மாள் மற்றும் ஜோதிலட்சுமி ஆகியோருக்கு ஆர். சேகர் எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகல். |

வா.சா.ஆ.7    12-09-2011  சேலம் மாநகரம் வார்டு-கே, பிளாக் 7 சர்வே எண். 149-க்கான வில்லங்க சான்றிதழ்.

<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை

ஒம்/- எஸ். எழில்

மூ.கூ.மா.நீ.

/ True copy /

Compared, corrected and uploaded by
Steno-Typist, III ADJ Court, Salem.

WEB COPY

==================================

மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்
சேலம்.

வரைவு / சீரான தீர்ப்புரை

அசல் வழக்கு எண். 224/2016
தேதி - 24-01-2017

WEB COPY

WEB COPY